# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.4/2023

## அ.சா.6 (LW9 )

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | செல்லம்மாள் | **தொழில்** | |
| **கணவர் பெயர்** | மொக்கை ராஜ் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **12.06.2024** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1, 2 எதிரிகள் ஆஜர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது குரும்பபட்டியில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். 2ஆம் எதிரி எனது மருமகள். இறந்து போன சென்ராயன் எனது மகன். எனது மகன் சுமார்3 ஆண்டுகளுக்கு முன்பு இறந்தார். நான் தோட்டத்தில் குடியிருந்து வருகிறேன். எனது மகன் ஊர் வீட்டில் குடியிருந்து வந்தார். மகன், மருமகள், பேரன், பேத்தி ஆகிய 4 பேரும் இருந்து வந்தார்கள். பக்கத்து தோட்டத்து முருகேசன் என்பவர் எனது மகன் இறந்தது பற்றி தகவல் சொன்னார். அப்போது நாங்கள் இருவரும் என் மகன் வீட்டிற்கு வந்து பார்த்தோம். அப்போது என் மகன் இறந்து கிடந்தார். என் மகன் குப்புற விழுந்து கிடந்தார். என் மகன் இறந்தது சம்பந்தமாக என் கணவர் போலீசில் புகார் கொடுத்தார். 1ஆம் எதிரி என் வீட்டிற்கு பக்கத்தில் குடியிருப்பவர். 2ஆம் எதிரியை 1ஆம் எதிரி பார்க்க வருவதை நான் கண்டித்தேன். அதற்கு 2ஆம் எதிரி என்னை பார்த்து 1ஆம் எதிரி வருவதை கண்டித்ததால் உன் தலை முடியை அறுத்துவிடுவதாக கூறினார். இறந்து போன எனது மகன் என்னிடம் தனது மனைவி செய்வது சரியில்லை என்றும் அவரது நடத்தை சரியில்லை என்றும் கூறினார். 1ஆம் எதிரியை என் மருமகளுடன் பேசாதே என்று என் கணவர் கண்டித்து இருவரும் சண்டையிட்டனர். 2 மாதத்திற்கு பின்னர் எனது மகன் இறந்து கிடந்தார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>1ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1ஆம் எதிரி எனது தோட்டத்திற்கு வந்தது சம்பந்தமாக அவரை நான் கண்டித்தாகவும் அப்போது 2ஆம் எதிரி அவ்வாறு நான் கண்டித்தால் எனது தலை முடியை அறுத்து விடுவதாக கூறினார் என்றும் போலீசார் விசாரணையில் சொல்யுள்ளேனா என்றால் சொல்லவில்லை. அ.சா.1 மற்றும் அ.சா.4 சொல்லிக்கொடுத்து தற்போது அவ்வாறு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.எனக்கு 2 பேத்திகள், 1 பேரன் உள்ளனர். 1ஆம் எதிரி எனது வீட்டிற்கு பக்கத்தில் இருப்பதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி தோட்டத்து வீட்டில் குடியிருக்கிறார் என்றால் சரியல்ல. 1ஆம் எதிரிக்கும் எனது கணவருக்கும் இடையில் பிரச்சனை ஏற்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. என் மகன் இறந்த அன்று காலையில் போலீசார் வந்த போது சுமார் 7.30 மணி இருக்கும். நாங்கள் கேள்விப்பட்டு அங்கு சென்ற போது எல்லோரும் வெளியே இருந்தார்கள். குமார் என்பவர் மட்டும் வீட்டின் உள்ளே இருந்தார். குமார் என்பவர் எனது மகனை உயிர் உள்ளதா என்று புரட்டி பார்த்தாரா என்றால் எனக்கு தெரியாது. போலீசார் என்னை எனது மகன் இறந்த வீட்டில் வைத்து விசாரித்தார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. இறந்து போன எனது மகனுக்கும் செல்வி மற்றும் கண்மணி ஆகியோருக்கும் இடையில் கள்ளத்தொடர்பு இருந்தது என்றால் இல்லை. எனது மகன் டிரைவராக பணிபுரிந்த போது பல்வேறு இடங்களில் கடன் வாங்கி அதனால் பிரச்சனைகள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. என்னையும் 2ஆம் எதிரியையும் தொடர்புபடுத்தி பேசிக்கொண்டார்கள் என்றும், அதனால் என் மகன் என்னிடம் பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல. என் மகன் இறந்த பின்பு சுமார் 60 நாட்கள் எங்கள் வீட்டில் தான் வசித்து வந்தார். அதன் பின்பு 2 ஆண்டுகள் அவரது அம்மா வீட்டிற்கு சென்று விட்டார். இந்த விபரம் வெள்ளைச்சாமி மற்றும் என் மனைவிக்கும் தெரியும். உயர் நீதிமன்றத்தில் நான் தாக்கல் செய்த மனு மற்றும் உத்தரவு நகல்களை நான் வைத்துள்ளேன். நான் சொன்னது போல் சொன்ன நேரத்தில், சொன்ன இடத்தில் சம்பவ இடத்தை பார்க்கவில்லை என்றும், 1ஆம் எதிரிக்கும், 2ஆம் எதிரிக்கும் தொடர்பு இல்லை என்றால் சரியல்ல. இறந்து போன எனது மகனுக்கு கடன் பிரச்சனை மற்றும் கள்ளத்தொடர்பு பிரச்சனைகள் இருந்தன என்றும் அதனால் அவர் தூக்கு மாட்டினார் என்றும், அது அறுந்து விழுந்த போது அவருக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 1ஆம் எதிரியிடம் இறந்து போன என் மகன் சுமார் ரூ.5 லட்சம் முதல் கடன் வாங்கியிருந்தார் என்றால் சரியல்ல. என் மகன் இறந்த பிறகு 1ஆம் எதிரி இந்த கடனை என்னிடம் திரும்ப கேட்டார் அதில் இருந்து தப்பிக்க போலீசில் பொய் புகார் கொடுத்துள்ளேன் என்று சொல்வது சரியல்ல. எனது மகன் இறந்த பிறகு அவர் கடன் வாங்கிய பல நபர்கள் என்னிடம் பிரச்சனை செய்தார்கள் என்றும், அப்போது நான் என் மருகளிடம்(ஏ2) அவரது வீட்டில் இருந்து பணம் வாங்கி வரும் படி வற்புறுத்தினேன் என்றும் 2 மாதம் கழித்து நான் வீட்டில் இருந்து அவரை துாரத்திவிட்டேன் என்றும் சொல்வது சரியல்ல. வழக்கில் உண்மை தன்மை இல்லததால் தான் போலீசார் இறுதி அறிக்கை தாக்கல் செய்யாமல் இருந்தார்கள் என்றும், என்னுடைய வற்புறுத்தலின்

பெயரில் பொய்யாக எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் சொல்வது சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**2ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை – இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

A K MEHBUB ALIKHAN

Digitally signed by A K MEHBUB ALIKHAN
Date: 2024.06.12 16:59:15 +0530

Additional District Judge,

Dindigul.